# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF XXXIV METROPOLITAN MAGISTRATE,
## (FAST TRACK COURT NO. 1), EGMORE AT ALLIKULAM, CHENNAI

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | STC.No. 4869/2025 | **CNR No.** | **:** | TNCHOF-081452-2024 |
| **Name** | **:** | Muthukrishnan | **Father Name** | **:** | Narayanasamy |
| **Witness for** | **:** | Accused | **Calling** | **:** | DW1 |
| **Age** | **:** | 46 | **Area** | **:** | Chrompet |
| **Taluk** | **:** | --- | **District** | **:** | Chennai-44 |
| **Start Time** | **:** | 01.55 Hrs | **End Time** | **:** | 02.10 Hrs |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 29.12.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, XXXIV Metropolitan Magistrate, Fast Track Court- 1, Egmore at Allikulam, Chennai – 03.

Accused present.

**<u>எதிரித் தரப்பு முதல் விசாரணை</u>**

1. வழக்கு காசோலை என்னுடையது தான். நான் வெங்கடசலாம் என்பவர் மூலம் கடன் வாங்கியிருந்தேன். வெங்கடசலாம் தான் பல்வேறு வகையில் எனக்கு கடனுக்காக பணம் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார். அவர் கொடுத்த பழைய கடனுக்காக நான் காசோலை கொடுத்திருந்தேன், கடனை திருப்பி செலுத்திவிட்டேன், அதை திருப்பி தரவில்லை. அதை பயன்படுத்தி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார். புகார்தாரருக்கும் வழக்கு காசோலைக்கும் சம்மந்தமில்லை. புகார்தாரருக்கு எந்த காசோலையும், கடிதமும் கொடுக்கவில்லை. பு.சா.ஆ.2 நான் புகார்தாரருக்கு வழங்கவில்லை, அதிலுள்ள விபரங்கள் நான் எழுதவில்லை. வெங்கடசலாம் யாரிடமிருந்து

வாங்கி கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அதன் விபரங்கள் எனக்கு தெரியும். பு.சா.ஆ.2 நிரப்பப்படாமல் நான் வெங்கடசலாம் என்பவரிடம் தான் கொடுத்திருந்தேன். அதில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் பொய்யாகும். அதில் பணம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ள தேதி தவறாகும். நான் அவரிடம் பணம் வாங்கியதற்கு முன்பே பணம் வாங்கியதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளார்கள். பு.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான், ஆனால் அதிலுள்ள மற்ற சங்கதிகளை நான் எழுதவில்லை, அது வேறு கையெழுத்தில் உள்ளது.

2. நான் அதற்கு முன்பு Melapachand என்பவரிடம் வெங்கடசலாம் கடன் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார், வழக்கு காசோலையும், Letter Head அவருக்கு கொடுக்கப்பட்டதாகும். வழக்கு காசோலை தாக்கல் செய்யப்பட்ட விபரம் பற்றி எனக்கு வெங்கடசலாம் தெரிவிக்கவில்லை, அது பற்றிய விபரங்கள் எனக்கு வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரியவந்தது. அதை தவறாக பயன்படுத்தியுள்ளார். வழக்கு பொய் வழக்காகும்.

**புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- G. Amar Anand

XXXIV Metropolitan Magistrate
(Fast Track Court -1)
Egmore at Allikulam, Chennai-03